DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 451/2024

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father / Husband Name | நாகப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 21. 05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2024 ம் தேதி மதியம் 3.30 மணிக்கு நான் மதுராந்தகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அருண்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.398/2024, பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஞானசேகர் மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வினோத்குமார் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**3.** பின்னர் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**4.** சம்பவம் நடந்த இடம், நேரம் மற்றும் தேதி என்ன என்றால் சம்பவயிடம் தண்டரைபேட்டை ஊராட்சிமன்ற அலுவலகம் அருகே 06.07.2024 அன்று இரவு 10.00 மணியளவில் நடந்தது. புகார் கொடுக்கப்பட்டு புகார் ஏற்பு ரசீது வழங்கப்பட்ட தேதி என்ன என்றால் 07.07.2024 புகார் கொடுக்கப்பட்டது, CSR 08.07.2024 மாலை 15.30

மணியளவில் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 09.07.2024 அன்று மதியம் 13.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் ஏற்பு ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார்தாரர் பாதிக்கப்பட்ட நபரின் தாய்மாமா என்றால் சரிதான். அவர் உத்திரமேரூர் வட்டத்தை சார்ந்தவர் என்றால் சரிதான்.

5. பரத் மருத்துவமனையில் எவ்வளவு நாள் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார் என்றால் மதுராந்தகம் மருத்துவமனையில் இருந்து பரிந்துரைக்கப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து எக்மோர் அரசு கண் மருத்துவமனைக்கு சென்றார். இந்த வழக்கு சம்மந்தமாக எக்மோர் மருத்துவர் யாரையும் விசாரித்தேனா என்றால் இல்லை. பரத் என்பவரின் வாக்குமூலத்தில் எதிரி கட்டிங் பிளேயரால் பின் மண்டயில் அடித்ததாக கூறியுள்ளாரா என்றால் திருப்புலியால் அடித்தாக கூறியுள்ளார். எதிரியும் பரத்தும் தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தண்டலம் கிராமம் மேல்மருவத்தூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். சாட்சி முனியான்டி பரத் கூத்து மேடை அருகே நண்பர்களுடன் சண்டை போட்டதால் தனது வீட்டிற்கு பரத்தை அழைத்துவந்ததாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

6. ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு அருகே பரத்துக்கும் தனசேகருக்கும் சண்டை என்று சொல்லியுள்ளார். அந்த சம்பவத்தை நேரடியாக பார்த்தாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. தனசேகருக்கும் பரத்துக்கும் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மருத்துவர் என்னுடைய விசாரணையில் பரத் என்பவரை எங்கு வைத்து தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் தண்டலம் கிராமத்தில் வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு மருத்துவரிடம் சான்று பெறப்பட்டதா அல்லது சான்று பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு தான் சான்று பெற்றுள்ளேன். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உள்ள புறகாவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட அழுத்தத்தால் தான் நான் இந்த வழக்கை பதிவு செய்தேன் என்றால் இல்லை.

7. உண்மையாக பிரச்சனை நடந்திருந்தால் இந்த வழக்கை மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் தான் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், என் உயர் அதிகாரியின் அழுத்தத்தின் காரணமாக எதிரி மீது வழக்கு பதிந்து தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.